## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 5/2018

பெயர்: சின்னராஜ் நாள் : 02.09.2022

வா.சா.1 – 1 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

வா.சா.1 – சின்னராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

நான் எனது பெற்றோருடன் ஒரே குடும்பமாக இருந்து வருவதாக 1 முதல் 7 பிரதிவாதிகள் தங்களின் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டு சொல்லியுள்ளார்கள் என்றால், இல்லை நான் தனியாகத்தான் குடியிருந்து வருகிறேன். நான் தனித்துதான் குடியிருந்து வருகிறேன் என்ற விபரத்தினை குறிப்பிட்டு மறு வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றாலும், எனது முதன்மை சாட்சியத்தில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், சரிதான். நான் எனது பெற்றோருடன் ஒரே குடும்பமாக இருந்து வருவதால்தான் பதில் வழக்குரை தாக்கல் செய்யவில்லை என்றாலும், முதன்மை சாட்சியத்தில் குறிப்பிட்டு கூறவில்லை என்றாலும், அதற்கான ஆவணங்களையும் தாக்கல் சென்றாலும், சரியல்ல. நான் முதன்மை சாட்சியத்தில் பிரதிவாதிகள் அவர்களின் எதிர் வழக்குரையில் குறிப்பிட்டுள்ள அசல் வழக்கு எண் 161/2004, 189/2006, 316/2008 ஆகிய வழக்குகள் பற்றிய விபரம் எனக்கு தெரியாது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால், இல்லை. நான் மேற்கண்ட வழக்குகள் பற்றிய விபரங்களை அறிந்திருந்தேன் என்றாலும், அதனால்தான் மேற்படி வழக்குகள் பற்றி தெரியாது என்று எனது முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்று சொன்னால், அதுபற்றி எனக்கு எதுவும் தெரியாது. நான் குறுக்கு விசாரணையில் மேற்படி வழக்குகள் குறித்த விபரம் தெரியாது என்று பொய்யாக சாட்சியம் அளிப்பது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் மேற்படி மூன்று வழக்குகள் குறித்த விபரங்களையோ அல்லது அதன் சொத்து விபரங்களையோ தெரிந்து கொள்வதற்கு ஏதேனும் முயற்சி எடுத்தேனா என்றால், இல்லை. நான் அந்த வழக்குளை பற்றி விபரங்களை தெரிந்து கொண்டிருந்ததால்தான் மேற்படி வழக்குகள் குறித்த விபரங்களையோ அல்லது சொத்துக்கள் குறித்த விபரங்களை தெரிந்த கொள்வதற்கு முயற்சி எடுக்கவில்லை என்றால், சரியல்ல. நான் வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 ஆவணங்கள் நடைமுறைபடுத்தப் பட்டது என்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல்

செய்துள்ளேன். அது என்ன ஆவணம் என்று எனக்கு தெரியாது. நான் அவ்வாறான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றாலும், இந்த வழக்கிற்காக ஆவணங்களை தாக்கல் செய்துள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணப்படி வழக்கு சொத்துக்களை அனுபவிப்பதற்கான ஆவணங்கள் ஏதேனும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. நான்தான் அனுபவித்து வருகிறேன். நான் வா.சா.ஆ.2, 3 ஆவணங்கள் மோசடியாக பெறப்பட்ட ஆவணங்கள் என்பதால்தான், அதை வெளி உலகத்திற்கே காட்டவில்லை என்றாலும், அதனடிப்படையில் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றாலும், சரியல்ல. வா.சா.ஆ.3 ஆவணப்படி எனக்கு ஒதுக்கப்பட்டதாக சொல்லப்படும் வழக்கு சொத்துக்கள் செக்குப்பந்தி கண்டு பிரித்தளிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரிதான். நான் இன்றைய தேதி வரை கூட்டு பங்குதாரர்களுக்கிடையே வழக்கு சர்வே எண்கள் 677/9, 686/1 ஆகியவை குறித்து பாகப்பிரிவினை ஏற்பட்டதாக வாதம் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால், சரிதான். மேற்படி வா.சா.ஆ.3 வழக்கு சொத்து சர்வே எண்களாக 677/9, 686/1 ஆகியவற்றின் கூட்டு பங்குதாரர்களை அந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்த்துள்ளேனா என்றால், அதைப்பற்றி எனக்கு தெரியாது. நான் எனது தகப்பனார் மற்றும் எனது சகோதர சகோதரிகள் சேர்ந்து எனது தகப்பனாரின் அறிவுறுத்தலின் பேரில் மேற்படி வழக்கு தாக்கல் செய்யப்பட்டதால்தான், மேற்படி வழக்கு பற்றிய விபரமே எனக்கு தெரியவில்லை என்றால், சரியல்ல. வழக்கு சொத்து சர்வே எண்களான 677/9, 686/1ன் மற்ற கூட்டு பட்டாதாரர்களை சேர்க்காமல் வழக்கு தாக்கல் செய்து சக்குபந்திகள் குறிப்பிட்டு நாங்கள் பெற்றதாக சொல்லப்படும் வா.சா.ஆ.3 ஆவணமானது மற்ற கூட்டு பங்குதாரர்களை கட்டுப்படுத்தாது என்றாலும், சட்டப்படி செல்லத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. வா.சா.ஆ.3 அடிப்படையில் நான் தாக்கல் செய்துள்ள வழக்கானது வழக்கு சொத்துக்களின் கூட்டு பட்டாதாரர்களான 1ம் பிரதிவாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றாலும், இந்த வழக்கு சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னாலும், சரியல்ல. நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் ஒருபொழுதும் இல்லாத காரணத்தினால்தான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் நான் இருப்பதாக கூறுவதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இல்லாத காரணத்தினால் சட்டப்படி உரிமையாளரான 1ம் பிரதிவாதிக்கு எதிராக நிரந்தர

உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்று சொன்னால், சரியல்ல. 1 ம் பிரதிவாதி பெயரிலான தாவா சொத்துக்களை பொறுத்து 17.04.1998 ம் தேதிய கிரைய பத்திரமானது சமூகம் நீதிமன்ற முந்தைய வழக்குகளான அசல் வழக்கு எண் 161/2004 மற்றும் 189/2006 ஆகிய வழக்கு தீர்ப்பாணையிலேயே உண்மையானது, நடைமுறைப்படுத்தப்பட்டது என்று தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில் விளம்புகை பரிகாரம் கோராமல், நான் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. 1 ம் பிரதிவாதி சுவாதீனம் மேற்படி வழக்குகளில் சமூகம் நீதிமன்றத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிலையில், தாவா சொத்துக்களின் சுவாதீனத்தை 1 ம் பிரதிவாதியிடம் கோராமல் வழக்கு தாக்கல் செய்துள்ளது நிலைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் விளம்புகை மற்றும் சுவாதீன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்து, அதற்குரிய நீதிமன்ற கட்டணத்தை செலுத்தியிருக்க வேண்டும் என்றாலும், அதை விடுத்து நிரந்தர உறுத்துக் கட்டளை மட்டும் கோரி செலுத்தியுள்ள நீதிமன்ற கட்டணமானது தவறானது என்று சொன்னால், சரியல்ல. வழக்கு 08.01.2018 ம் தேதி கோப்பிற்கு ஏற்கப்பட்டிருந்தபோதும், பிரதிவாதிகளுக்கு சம்மன்களை உடனடியாக அனுப்பாமல் படி மெமோவானது பலமுறை திருப்பப்பட்டு, 11.01.2019 ம் தேதி வாய்தாவிற்குதான் பிரதிவாதிகளுக்கு சம்மன் சார்வானது என்று சொன்னால், சரிதான். நான் இந்த வழக்கை மோசடியாக தாக்கல் செய்திருப்பதால்தான் பிரதிவாதிகளுக்கு அழைப்பாணை சார்வு செய்வதற்கு 1 வருட காலம் வேண்டுமென்றே காலதாமதம் செய்தேன் என்றாலும், அந்த வகையில் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. 1 ம் பிரதிவாதியின் பெயரிலான 17.4.1998 தேதிய கிரைய பத்திரமானது உண்மையானது என்றும், அதனடிப்படையில் தாவா சொத்துக்களை 1 ம் பிரதிவாதி சுவாதீனத்திலிருந்ததும், சமூகம் நீதிமன்ற அசல் வழக்கு எண் 161/2004, 189/2006 ஆகிய வழக்குகளில் தீர்மானிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த வழக்கானது முன் தீர்ப்பு தடையாலும் பாதிக்கப்பட்டுள்ளது என்று சொன்னால், சரியல்ல. சமூகம் நீதிமன்ற அசல் வழக்கு எண் 189/2006 வழக்கில் எனது தகப்பனார் கோனேரி பிரதிவாதியாக உள்ள நிலையில், அவரிடமிருந்து நான் பெற்றதாக கூறும் வா.சா.ஆ.3 ஆவணம் சட்டப்படி நிலைக்கத்தக்கது அல்ல என்றாலும், 1 ம் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றாலும், சரியல்ல. நான் இந்த வழக்கை செய்யும்போது எனது அத்தை மாரியம்மாள் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்த சமூகம் நீதிமன்ற அசல் வழக்கு எண் 316/2008 வழக்கானது நிலுவையில் இருந்த

காரணத்தினால், இந்த வழக்கிற்கு எனது தாத்தாவின் அனைத்து வாரிசுகளையும் தரப்பினர்கள் என்றாலும், அவர்களை சேர்க்காமல் இந்த வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில், அவசிய தரப்பினர்களை சேர்க்கவில்லை என்ற காரணத்திற்காக தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. என் தகப்பனார் கோனேரி பெயரிலான 03.08.1992 தேதியிட்ட உயிலானது உண்மையானதாக இருந்து, அதில் எனது அத்தை மாரியம்மாள் சாட்சியாக கைரேகை செய்திருந்தால், அவர் தாக்கல் செய்திருந்த சமூகம் நீதிமன்ற அசல் வழக்கு எண் 316/2008 வழக்கிலேயே அந்த உயிலைப்பற்றி குறிப்பிட்டிருப்பார் என்றாலும், அந்த வழக்கிற்கு பின்னிட்டு மேற்படி உயிலானது மோசடியாக தயார் செய்யப்பட்டுள்ளது என்றாலும், சரியல்ல. 03.08.1992 தேதியிட்ட உயிலானது உண்மையானதாக இருந்திருக்கும் பட்சத்தில், என் தாயார் எனது தகப்பனாரின் சகோதரரான பெரியண்ணனுடன் 03.04.1998 தேதியிட்ட கிரைய ஒப்பந்த பத்திரத்தை ஏற்படுத்திருக்க மாட்டார் என்றும், அதனடிப்படையில் அசல் வழக்கு எண் 161/2004 என்ற வழக்கை தாக்கல் செய்திருக்கமாட்டார் என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்துக்கள் தற்போது பூஸ்திதில் உள்ளது என்பதை நிரூபிக்க எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். வழக்கு சொத்துக்கள் தற்போது பூஸ்திதியில் இல்லையென்றாலும், அதனால் நிரந்தர உறுத்துக் கட்டளை பரிகாரம் கோரமுடியாது என்றால், சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வழக்கு 1 முதல் 7 பிரதிவாதிகளின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல. நான் வழக்கில் கூறியுள்ளபடி எந்த வழக்கு மூலமும் ஏற்படவில்லை என்றாலும், பொய்யான வழக்கு மூலத்தின் அடிப்படையில் வாக்கு தாக்கல் செய்துள்ளதால், வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் /சின்னராஜ்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,<br>
மாவட்ட உரிமையியல் நீதிபதி,<br>
சங்ககிரி.